செய்தி வெளியீடு எண் : 823 நாள் : 03.05.2023

# செய்தி வெளியீடு

## புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற மஞ்சுவிரட்டில் மாடுமுட்டி உயிரிழந்த காவலரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு

புதுக்கோட்டை மாவட்டம் கல்லூரில் இன்று (3-5-2023) நடைபெற்ற மஞ்சுவிரட்டு போட்டியின் போது அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த மீமிசல் காவல் நிலைய காவலர் திரு.நவநீதகிருஷ்ணன், த/பெ.ஜெயகிருஷ்ணன் (வயது-32) என்பவரை எதிர்பாராத விதமாக மாடுமுட்டியதில் உயிரிழந்தார் என்ற செய்தியினை கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்த காவலரின் குடும்பத்தினருக்கும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன். பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த போது உயிரிழந்த காவலர் திரு.நவநீதிகிருஷ்ணனுடைய குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொதுநிவாரண நிதியிலிருந்து இருபது இலட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

***

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :
tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in